# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109409

1. District மாவட்டம்: Virudhunagar | PS: காவல்நிலையம்: Vigilance and Anti Corruption | Year: ஆண்டு: 2024 | FIR No. மு.த.அ. எண்: 04/2024 | Date நாள்: 06.05.2024

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 02.05.2024 | Date to : மற்றும் நாள் வரை 04.05.2024

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 18.00 hrs. | Time to : நேரம் வரை 12.45 hrs.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.05.2024 | Time : நேரம் 06.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 06.05.2024 | Time : நேரம் 06.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — About 6 Kms / North East

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி — சொர்ணலெட்சுமி மெடிக்கல், விருதுநகர் பழைய பேருந்து நிலையம் அருகில்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — திரு.V.M.ஆனந்தராஜ் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — திரு.மாடசாமி நாடார்

(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு: 12.05.1975 | (d) Nationality : நாட்டினம்: Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் — சுயதொழில் / நுகர்பொருட்கள் வியாபாரம் | (g) Address : முகவரி — எண்.148/3/1, புல்லலக்கோட்டை ரோடு, விக்னேஷ் காலணி, விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.தயாநிதி, உதவி ஆய்வாளர், தொழிலாளர் துறை, விருதுநகர், விருதுநகர் மாவட்டம் மற்றும் அவரது கார் டிரைவர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- வாதியால் தாமதம் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து அனுப்பப்படுகிறது**

நான் இன்று 06.05.2024 காலை 06.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், விருதுநகர், புல்லலக்கோட்டை ரோடு, விக்னேஷ் காலணி, கதவு எண்.148/3/1, என்கிற முகவரியை சேர்ந்த திரு.மாடசாமி நாடார் என்பவரின் மகன் திரு.V.M.ஆனந்தராஜ் என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த கனிணியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரை பெற்று அதை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 06.05.2024 காலை 08.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திரு.தயாநிதி, உதவி ஆய்வாளர், தொழிலாளர் துறை, விருதுநகர், விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 6/5/24 [signature] 6/5/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

06.05.2024 at 11.00 hrs.

Name: பெயர் C. SALVAN THURAI
Rank: நிலை Inspector of Police, No. எண் ..........
Vigilance and Anti Corruption, Virudhunagar.

**விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.04/2024 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

பிரிவு குற்ற எண்.04/2024 சட்டப்பிரிவு **7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018**-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.V.M.ஆனந்தராஜ் அவர்களது புகார் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல் திரு.V.M.ஆனந்தராஜ் த/பெ.மாடசாமி நாடார், கதவு எண்.148/3/1 புல்லலக்கோட்டை ரோடு, விக்னேஷ் காலனி, விருதுநகர். பெறுதல் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். ஐயா, நான் விருதுநகர் புல்லலக்கோட்டை ரோடு, விக்னேஷ் காலனியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விருதுநகர் பழைய பேருந்து நிலையம் அருகில் கதவு எண்.18-1, அக்ரகாரம் தெரு, விருதுநகர் என்ற முகவரியில், ராகேஷ் ஏஜென்ஸிஸ் என்ற பெயரில் நுகர்பொருட்களை விற்பனை செய்யும் ஒரு நிறுவனத்தையும், அதற்கு எதிர்புறம் சொர்ணலட்சுமி (SL) மெடிக்கல் என்ற பெயரில் ஒரு நிறுவனத்தையும், மேலும் சில பெயர்களில் வேறுசில நிறுவனங்களையும் வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 19.03.2024 அன்று பிற்பகல் நேரத்தில் ராகேஷ் ஏஜென்சீஸ் என்ற எனது நிறுவனத்திற்கு விருதுநகரில் தொழிலாளர்துறை உதவி ஆய்வாளராக பணியாற்றும் திரு.தயாநிதி என்பவர் வந்து, எனது ஏஜென்சியை ஆய்வு செய்து, ஆவணங்களை பரிசீலனை செய்து, பணியாளர்களுக்கு குறைவாக ஊதியம் வழங்குவதாக கூறியும், ஒருசில சட்ட முரண்பாடுகளை தெரிவித்தும், எனது ராகேஷ் ஏஜென்சியில் அப்போது வேலை செய்த 4 நபர்களிடம் கையெழுத்தும் வாங்கிக்கொண்டு சென்றார். அவ்வாறு ஆய்வு செய்ததை வைத்து கண்டுபிடித்த சட்ட முரண்பாடுகளை குறிப்பிட்டு ஆய்வு உத்தரவு கடிதம் ஒன்றை மறுநாள் (20.03.2024) எனக்கு கொடுத்தார். அதேபோல எனது ஏஜென்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படவில்லையென்று மதுரை தொழிலாளர் இணை ஆணையருக்கு ஒரு கடிதமும் அனுப்பியுள்ளார். இதுசம்பந்தமாக மதுரை தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்திலிருந்து என்னையோ, என்சார்பாக என்னால் அதிகாரம் வழங்கப்பட்ட நபரையோ 16.04.2024 முற்பகல் நேரில் விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து 10.04.2024 தேதியிட்ட அறிவிப்பு கடிதம் ஒன்று எனக்கு கிடைத்தது. அதன்படி எனது சார்பாக எனது மேனஜரை 16.04.2024 அன்று விசாரணைக்கு ஆஜராக அனுப்பி வைத்தேன். அன்றைய தினம் விருதுநகர் தொழிலாளர்துறை உதவி ஆய்வாளர் திரு.தயாநிதியும் மதுரை தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் ஆஜராகியுள்ளார். அதன்பிறகு ஒருநாள் முற்பகல் நேரத்தில் நான் எப்பொழுதும் இருக்கும் சொர்ணலட்சுமி மெடிக்கல்ஸில் இருந்தபோது, விருதுநகர் தொழிலாளர்துறை உதவி ஆய்வாளராக பணியாற்றும் திரு.தயாநிதி என்பவர் என்னை வந்து சந்தித்து, என்னங்க உங்க ராகேஷ் ஏஜென்சியை இன்ஸ்பெக்ஷன் பார்த்து சட்ட முரண்பாடுகள் இருப்பதாக தெரிவித்து ஆய்வு உத்தரவு கடிதம் ஒன்றை அனுப்புனேன், அப்பவும் நீங்க வந்து என்னை தனியா பார்க்கல, அதனால உங்க ராகேஷ் ஏஜென்சியை ஆய்வு செய்தபோது அங்கு

பணிபுரிந்த 4 பணியாளர்களிடம் பெற்ற கையொப்பத்தை வைத்து குறைவான சம்பளம் வழங்குவதாக தெரிவித்து மதுரை தொழிலாளர் இணை ஆணையருக்கு குறைந்தபட்ச கூலி சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க கேட்டு அறிக்கை அனுப்பினேன். அதன்பேரில் 16.04.2024 அன்று நேரில் விசாரணைக்கு, ஆஜராகும்படி மதுரை தொழிலாளர் இணை ஆணையர் அவர்களிடமிருந்து அறிவிப்பு கடிதம் உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அப்பவும் நீங்க வந்து என்னை தனியா பார்க்கல, என்னதான் நினைச்சுகிட்டு இருக்கீங்க, நிறைய பெயர்களில் நிறுவனங்கள் நடத்திட்டு வர்றீங்க, தொடர்ந்து தொழில் செய்யுறதா நினைப்பு உங்களுக்கு இல்லையா என்று சகட்டுமேனிக்கு பேசினார். அப்போது நான் அவரிடம், என்ன சார் ஏதேதோ பேசுறீங்க, என்னென்னமோ சொல்றீங்க, ஒன்னுமே புரியல சார், நான் எல்லா நிறுவனத்தையும் கரெக்டா தொழிலாளர் சட்ட விதிகளுக்குட்பட்டுதான் நடத்திகிட்டு இருக்கேன் சார், அப்படி இருந்தும் நீங்க இப்படி ஆய்வு செய்து நோட்டீஸ் அனுப்பினால் நான் என்ன செய்வது, எப்படி தொழில் செய்வது சார் என்று கேட்டேன். அதற்கு அவர் என்னிடம், சரி நடந்தத விடுங்க, நீங்க நிறைய நிறுவனங்கள நடத்திட்டு வர்றீங்க, நீங்க பணியாளர்களுக்கு குறைவான சம்பளம் வழங்குறது சம்பந்தமாக வருகிற 07.05.2024 அன்று நீங்க மதுரை தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்திற்கு வர வேண்டி இருக்கு. அதேபோல குழந்தை தொழிலாளர்களை வேலைக்கு வைத்ததாக விருதுநகர் கோர்ட்டிலிருந்து நோட்டீஸ் ஒன்றும் உங்களுக்கு வரும், அந்த நோட்டீஸ் வந்த பிறகு நீங்க ஒரு நாள் கோர்ட்டுக்கு வர வேண்டி இருக்கும், நான் சொன்னது போல நீங்க கேட்டா, இப்ப உங்க ராகேஷ் ஏஜென்சி மேல போட்ட கேஸையும் சரி பண்ணிருவேன், மற்ற நிறுவனங்கள் மேலேயும் இனிமேல் கேஸ் போடாமலும், அடிக்கடி உங்க நிறுவனத்திற்கு இன்ஸ்பெக்ஷனுக்கு வராமலும் பார்த்துக்கொள்வேன் என்று சொன்னார். அப்ப சொல்லுங்க சார், நான் என்ன சார் செய்ய வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர், எனக்கு தனியா ரூ.1,00,000/- பணம் கொடுத்துருங்க, நான் கேட்டபடி நீங்க ரூ.1,00,000/- பணத்தை கொடுத்தால், இனிமேல் உங்க நிறுவனங்களுக்கு எந்த தொந்தரவும் இல்லாமல் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னார். லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை, இருந்தாலும் அப்போது அவரிடம், சார் ரூ.1,00,000/- ரொம்ப அதிகமாக இருக்கு என்று சொன்னேன். அதற்கு அவர், நிறைய நிறுவனங்கள் நடத்தும் உங்களை போன்ற உரிமையாளர்களிடம் இதுமாதிரி கேட்டு வாங்குறதுதான், அதனால நான் கேட்ட ரூ.1,00,000/- பணத்தை ரெடி பண்ணி வைச்சிருங்க நான் இங்கேயே வந்து வாங்கி கொள்கிறேன் என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். பின்னர் 02.05.2024 மாலை சுமார் 06.00 மணியளவில் நான் எப்பொழுதும் இருக்கும் சொர்ணலட்சுமி மெடிக்கல்ஸில் இருந்தபோது, விருதுநகர் தொழிலாளர்துறை உதவி ஆய்வாளராக பணியாற்றும் திரு.தயாநிதி, ஒரு நபரை உடன் அழைத்துவந்து என்னை சந்தித்து, என்னங்க நான் கேட்ட ரூ.1,00,000/- பணம் என்னாச்சு, ரெடிபண்ணி வச்சிருங்கீங்கலா என்று கேட்டார். அப்போது அவருடன் வந்த அந்த நபரை என்னிடம் காண்பித்து, இவர் என்னோட கார்

டிரைவர்தான், அந்த பணத்தை இவர்கிட்ட கொடுங்க என்று சொன்னார். அப்போது நான் அவரிடம், அவ்வளவு ரொக்க பணத்துக்கு இப்ப எங்க போவேன் சார் என்று சொன்னேன். அப்ப அவர் என்னிடம், உங்கள பாத்தா நல்லவரா தெரியுது, அதனால நீங்க 1 லட்சத்திற்கு பதிலா, 25 ஆயிரத்தை குறைத்து கொண்டு 75 ஆயிரமாக ரெடிபண்ணி வச்சிருங்க, சனிக்கிழமை (04.05.2024) மதியம் பேல நானே வந்து வாங்கிக்கிறேன். சனிக்கிழமை லீவா இருக்கு, என்னால முடியலனா இவர அனுப்பி வைக்கிறேன், இவரிடம் கொடுத்து அனுப்புங்க என்று அவருடன் வந்திருந்த அவருடைய கார் டிரைவரை காண்பித்து சொன்னார். இந்த பணத்தையாவது கரக்டா கொடுத்திருங்க, ஏமாத்த நினைச்சீங்கன்னா, நீங்க ஒழுங்கா தொழில் பண்ண முடியாது என்றும் கூறிவிட்டு சென்றுவிட்டார். நான் என்ன செய்வது என்று புரியாமல் இருந்த நிலையில், சனிக்கிழமை (04.05.2024) மதியம் சுமார் 12.45 மணியளவில் நான் சொர்ணலட்சுமி மெடிக்கல்ஸில் இருந்தபோது, மேற்படி கார் டிரைவர் வந்து, சார் வேறு வேலையா போயிட்டாங்க, அதனால என்னை அனுப்பி வச்சாங்க, சார் அன்றைக்கு கேட்ட பணம் 75 ஆயிரம் ரெடியா இருக்குங்களா என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம், நானே கொஞ்சம் கஸ்டத்தில இருக்கேன், விற்ற சரக்குக்கு பணமும் ஒழுங்கா வந்து சேரல அதனால உங்க சார் கேட்ட 75 ஆயிரம் பணத்த இன்னும் பொரட்ட முடியலங்க என்று சொன்னேன். அதற்கு அந்த டிரைவர் என்னிடம், நீங்களே சார்கிட்ட போன்ல பேசிருங்க, அன்னைக்கு என்முன்னாலதான் அவர் உங்ககிட்ட சொல்லிட்டு போனாரு, இப்ப பணம் வாங்காம போனா, சார் என்ன திட்டுவாரு என்று சொன்னார். அதனால் நான் என்னுடைய செல்போன் (செல்போன் நம்பர்.8012510099) மூலமாக தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர் திரு.தயாநிதி செல்போனுக்கு (செல்போன் நம்பர்.9865117777) பேசி பணம் தற்போது இல்லை என்கிற விஷயத்தை சொன்னேன். அதற்கு அவர், என்னங்க இழுத்தடிக்கிறீங்க, இத்தன நிறுவனம் வச்சிருக்கீங்க ஒரு 75 ஆயிரம் பணத்த பொரட்ட முடியலயா, கரக்டா கொடுத்திருங்க, ஏமாத்த நினைக்காதீங்க, ஏமாத்த நினைச்சீங்கன்னா, உங்கள ஒழுங்கா தொழில் செய்யவிடமாட்டேன், அடிக்கடி உங்க நிறுவனங்களுக்கு வந்து இன்ஸ்பெக்சன் பார்க்க வேண்டிவரும் என்று சொல்லி, நான் கேட்ட 75 ஆயிரம் பணத்தை திங்கள்கிழமையாவது (06.05.2024) ரெடிபண்ணி வச்சிருங்க, அன்றைக்கு (06.05.2024) நானே அங்கவந்து வாங்கிக்கிறேன், இல்லைனா என்னுடைய கார் டிரைவரையோ அல்லது வேறு யாரையாவது தகவல் சொல்லி அனுப்புறேன், அவங்ககிட்ட கொடுத்துவிடுங்க என்று கூறினார். நான் வேறு வழியில்லாமல், சரிங்க சார், நீங்க கேட்ட ரூ.75 ஆயிரம் பணத்தை ரெடி பண்ணி வச்சிடுறேன் சார் என்று சொன்னதும், போனை கட்செய்துவிட்டார். என்னிடம் லஞ்சமாக ரூ.75,000/- பணம் கேட்ட விருதுநகர் தொழிலாளர்துறை உதவி ஆய்வாளர் திரு.தயாநிதி மற்றும் அவரது கார் டிரைவர் ஆகியோர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (sd) V.M.Anantharaj.6/5/24 Sir, Received the complaint on 06.5.2024 at 06.00 hrs. The genuineness of the complainant was verified through

sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.04/2024 u/s 7 of the P.C Act 1988 as amended in 2018 on 06.05.2024 at 08.00 hrs and took up for investigation. (Sd) (C.Salvan Thurai) 6/5/2024 Insp.,V&AC,VNR.

The original FIR along with original complaint is submitted to the court of the CJM cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.

6/5/24

(C.SALVAN THURAI)
Inspr./V&AC/VNR